Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 158

வியாழக்கிழமை
02 மே 2024

**முச்சந்தி முரளி**



"இப்பவே எரிக்கிற வெயில் இன்னும் கூடுமெண்டால் ஆக்கள் கருகத்தான் போயினம் கண்டியளோ"

## உதயனுக்குள் வெறியாட்டம்

### நீதியின்றிக் கடந்தது 18 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், மே 2
"உதயன்" பத்திரிகை அலுவலகத்துக்குள் ஆயுததாரிகள் உட்புகுந்து வெறியாட்டம் நடத்தி இன்றுடன் 18 ஆண்டுகள்.
2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த காடையர்களின் சரமாரியான துப்பாக்கிச்சூட்டில்

16



# தமிழருக்குத் தீர்வு 13 ஆவது திருத்தமே

## பெரும்பான்மையினரை இணைத்து சிறுபான்மையினருக்குத் தீர்வு

## மே தினத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, மே 2**

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களையும் இணைத்துக்கொண்டு, சிறுபான்மையின மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும்.

15



## உழைப்பாளர் உரிமைகோரி வடக்கில் மே தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 2
உழைக்கும் மக்களின் உரிமைகளை வலியுறுத்தி வடக்கின் பல்வேறு இடங்களிலும் நேற்று புதன்கிழமை மே தின நிகழ்வுகள் மற்றும் பேரணிகள் என்பன முன்னெடுக்கப்பட்டன.

15

## மலையகத் தொழிலாளருக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளம்!

### ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, மே 2
மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளமாக ஆயிரத்து 700 ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கொட்டகலையில் நடைபெற்ற இ.தொ.கா.வின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர்

15

## வரும் நாள்களில் வெப்பம் எகிறும்

யாழ்ப்பாணம், மே 2
வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் அடுத்த சில நாள்களுக்கு 42 பாகை செல்சியஸ்க்கும் அதிக வெப்பநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா. பிரதீபராஜா

11

## சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் விஜயதாஸ

கொழும்பு, மே 2
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவே போட்டியிடுவார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

12

## லாண்ட்மாஸ்ரரை மோதிய 'ஹைஏஸ்'

### ஒருவர் உயிரிழப்பு; ஐவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 2
ஏ-9 பிரதான வீதி கைதடி - நுணாவில் பகுதியில் ஹைஏஸ் வாகனம் - லாண்ட் மாஸ்ரரை மோதித்தள்ளியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஐவர் படுகாயமடைந்த

15

## ஓடு பிரித்து உள்நுழைந்து நகை, பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், மே 2
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியில் வயோதிபப் பெண் தனித்திருந்த வீட்டில் நகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

15

## முன்னிலை சோஷலிஸ கட்சியும் பந்தயத்தில்

கொழும்பு, மே 2
ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலை சோஷலிஸக் கட்சியும் களமிறங்கும் என்று அந்தக்கட்சியின் செயலாளர் குமார் குணரத்னம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என

13

### ஜனாதிபதிப் பொதுவேட்பாளர்

## தமிழர்களின் பலத்தை நிரூபிக்கும் தருணம்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 2
தமிழர்களாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பொதுவேட்பாளரை ஆதரிப்போம். பலவீனமான அமைப்பாக இன்றி, பலம் வாய்ந்தவர்களாக எம்மை சர்வதேசத்துக்கு நிரூபிக்கவேண்டிய காலமிது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தமிழ்த் தேசிய

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவழியா 18ஆம் ஆண்டில்...



பஸ்ரியன் ஜோர்ஜ்
சகாயதாஸ் (சுரேஷ்)
(விற்பனை
முகாமையாளர்)



இராஜரட்ணம்
ரஞ்சித்குமார்
(விநியோகப் பகுதி
பணியாளர்)

**உதயனுக்காக
உயிர்க்கொடை தந்தோரை
நினைவில் கொள்வோம்**

உதயன் குழுமத் தலைவரும்
பணியாளர்களும்

உதயத்தில் உதயன் கற்றோர் உள்ளங்கள் உவகை கொள்ளும்
இதயமுள்ளோர்கள் ஆவல் கணித்திடத் தேடி நிற்பார்
புதியன பூக்கும் வல்லோர் புலமையை ஏற்றும் போற்றும்
அதிபெரு வளர்ச்சி இந்த அகிலஉலகமும் உதயனின் சுற்றம்

தெருக்களும் ஊரும் பேரும் தீமைகள் குறைக்கத் தேடும்
உருக்கொளும் கொடுமை யாவும் ஒழித்திடக் கூடும் ஆயும்
செருக்கிலான் பயணம் மக்கள் சேவையே மகேசன் சேவை
இருக்கிறான் பயமேதென்பார் இதயத்தே உதயன் உள்ளான்

நெருப்பென உலவி வந்தான் நீறிட்டான் பொய்மை கொன்றான்
பெருக்கினான் இனிமை தூய்மை பெருகிடும் உதயன் கண்டோ!
சுருக்கிட நினைத்தார் ஊடக சுதந்திரம் அழிக்க வந்தோர்
வருத்தினார் எரித்தார் எங்கள் வளங்களைச் சிதைத்து நின்றார்

ஆயுதம் தரித்தோர் செய்த அநீதிக்கு உதவி நின்றோர்
தூய சிந்தனையின் முன்னே துலங்கிடும் வலிமை அற்றோர்
நேயமாய் பணி தொடர்ந்த நியாயத்தைக் கொல்ல நின்றார்
தாய்நிலத் துயர்ந்த செய்தித் தாளின் மேல் பொறாமை கொண்டார்

ஊடக சுதந்திரத்திற்கொரு தினம் உலகம் போற்றும்
ஏடிதன் பெருமை ஓங்கும் ஒரு சிலர் ஏனோ? அறிவின்
கூடமாய் ஒளியாய் தோன்றும் குன்றதன் கருப்பைத் தீய்த்தே
காடதாய் மாற்றும் தீய கயவராய் கோலம் கொண்டார்?

கடமையாம் ஊடகத்தின் கருத்துரை சுதந்திரத்தை
அடக்கிடத் துணிந்தெம் அன்பின் ஊழியர் உயிரைக் கொன்றார்
திடமன துடையோம் அந்த அநீதியின் பதினெட்டாம் ஆண்டு
நினைவினில் வைத்தோம் அன்பின் தீபமிட்டஞ்சலிப்போம்.

கிளிநொச்சி - நாச்சிக்குடா

# தமிழ்ப் பாடசாலைக்கு மீண்டும் முஸ்லிம் சாயம்

## பொதுமக்கள் கடும் அதிருப்தி

**கிளிநொச்சி, மே 2**

**கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று இடம்பெறவுள்ள நிலையில், இது தொடர்பான அழைப்பிதழ்களிலும், விளையாட்டுகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள சான்றிதழ்களிலும் கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்று அச்சிடப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.**

மேற்படி கல்லூரியின் தற்போதைய அதிபர், இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாச்சிக்குடா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் கிடைக்கப் பெற்றிருந்தும், நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பதவி முத்திரையைப் பயன்படுத்திக் கையொப்பம் வைத்திருந்தமை கடந்த சில தினங்களுக்கு முன்னர் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதையடுத்து, முன்னர் பயன்படுத்தி வந்த பெயரையே உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்துமாறு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மேற்படி பாடசாலையின் அதிபருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. இதனை மீறி மீண்டும் கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை என்ற பெயர் இல்ல மெய்வல்லுநர் போட்டி அழைப்பிதழிலும், சான்றிதழ்களிலும் அச்சிடப்பட்டிருப்பது குறித்த பாடசாலை நலனில் அக்கறை கொண்ட பல்வேறு தரப்பினரது மத்தியில் அதிர்வலையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் உத்தரவை மீறித் தற்போதைய அதிபர் செயற்படுவது யாரைத் திருப்திப்படுத்த? எனப் பலரும் கேள்வியெழுப்புகின்றனர். (ம-66)

அம்புலன்ஸை நடுவீதியில்

# இடைமறித்தன யானைகள்

## செட்டிகுளத்தில் திகில்

செட்டிகுளம் ஊடாக மன்னார் செல்லும் பிரதான வீதியில் அம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்களை வழிமறித்தும், வீதியைக் குறுக்கறுத்தும் யானைக் கூட்டம் அட்டகாசம் செய்துள்ளது. செட்டிகுளம், பறயனாலங்குளம் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக யானைகள் வீதியில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு செய்து வந்ததாக வீதியால் பயணம் செய்த மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஓரிரு நாள்களுக்கு முன்னர் இதே பகுதியில் பல மின்கம்பங்களை உடைத்து யானைகள் சேதமாக்கியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-18)

கடல் வளங்கள் விடயத்தில்

# இலங்கை - இந்தியா இரண்டும் இணைந்து செயற்படவேண்டும்

யாழ்ப்பாணம், மே 2

இலங்கையும் இந்தியாவும் கடல் வளங்களின் அடிப்படையில்இணைந்து செயற்படவேண்டும் என்று எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்தார்.

நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் தூதுவரும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை ஆலோசகருமான எரிக்சொல் ஹெய்ம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போது நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே எரிக்சொல் ஹெய்ம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையும் இந்தியாவும் கடல்வளம் சார்ந்த பிரச்சினைகளை இணைந்து கையாள வேண்டும். இந்து சமுத்திரத்தில் இரண்டு நாடுகளும் இணைந்து செயற்படும்போதே கடல்வளம் சார்ந்த பிரச்சினைகளை கையாளவும் நிவர்த்தித்துக்கொள்ளவும் முடியும். இலங்கையின் பொருளாதார விருத்தியை மேம்படுத்தும் முகமாக நோர்வேயில் இருக்கும் பல்வேறுபட்ட நிறுவனங்களைஊக்குவித்து இலங்கையில் முதலிடு வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள் ளோம். மேலும் கடல் உணவு சார்ந்த ஏற்றுமதிகளையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது - என்றார். (ம-125)

அரிசி விநியோகம் தொடர்பில்

# யாழ்ப்பாணத்தில் முறைப்பாடில்லை

வறிய குடும்பங்களுக்கான அரிசி விநியோகம் தொடர்பில் இதுவரை எதுவித முறைப்பாடுகளும் மாவட்ட செயலகத்துக்கு கிடைக்கப்பெறவில்லை என யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தரமான அரிசி வழங்கப்படுவதாக பிரதேச செயலாளரால் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் ஒரு குழுவாகச் சென்று இதனை அவதானித்து வருகின்றார்கள்- என்றார். (ஒ-125)

# சட்டவிரோத மீன்பிடி இருவர் கைது



யாழ்ப்பாணம், மே 2

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலை, குழைகளை கடலில் போட்டு கணவாய் மீனை பிடிப்பதற்காக படகில் சென்ற இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (ஓ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு வழங்காத அனுமதி சோலர் நிறுவனத்துக்கு எவ்வாறு?

*யாழ்ப்பாண பதில் மாவட்டச் செயலர் கேள்வி*



**யாழ்ப்பாணம், மே 2**
**அரச காணிகளில் சோலர் நிறுவனம் அதன் செயற்பாட்டை முன்னெடுக்க உடனடியாக அனுமதி வழங்கும் திணைக்களம், பொதுமக்களுக்கு அனுமதி வழங்க மட்டும் இழுத்தடிப்பது ஏன்? என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் கேள்வி எழுப்பியுள்ளார்.**


யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காணிப்பயன்பாட்டு குழுக் கூட்டத்தில் வைத்தே யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மருதங்கேணிப்பிரதேசசெயலர் பிரிவில் பொதுமக்களின் தேவைக்காக காணிகளைக் கோரியபோது வன உயிரிகள் திணைக்களத்தினர் அந்தக் காணிகளை வழங்கவில்லை. ஆனால், சோலர் நிறுவனத்தின் தேவையொன்றுக்காகக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன - என்று பதில் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு, குறித்த நிறுவனத்தினர் கொழும்புக்குச் சென்றே அனுமதியைப் பெற்றுவந்தனர் என்று வன உயிரிகள் திணைக்களத்தினர் பதில் வழங்கினார்கள்.

இதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பதில் மாவட்டச் செயலர், 'அவ்வாறெனில், அந்த வழிவகைகளைத் தெரிவியுங்கள். மக்களுக்காக கொழும்புக்குச் செல்ல நானும் பிரதேச செயலரும் தயாராகவே இருக்கின்றோம்' என்று கூறினார். (அ-ம-125)

## 'அஸ்வெசும' மோசடிக்கு வேலைத்திட்டம்



கொழும்பு, மே 2

'அஸ்வெசும' கொடுப்பனவுக்கு போலியான தகவல்களை வழங்கியோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள்சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், போலியான தகவல்களை வழங்கி அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளைக் கண்டறிய விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதுதொடர்பான சுற்றுநிருபம் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பணவீக்கம் ஏற்றம்

கொழும்பு, மே 2

கொழும்புநுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம், கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் 0.9 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. (ச-இ)

## 'அஸ்வெசும' திட்டத்துக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு!

கிளிநொச்சி, மே 2

ஆசிய அபிவிருத்தி வங்கியினரால் கிளிநொச்சி மாவட்டத்தின் அஸ்வெசும திட்டப் பயனாளிகளை வலுவூட்டும்வேலைத்திட்டம் தொடர்பில் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களுக்கு அறிவூட்டல் வழங்கும் கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில் வளவாளர்களாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சத்தியசீலன், மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன், மேலதிக செயலர் இ. நளாஜினி உள்ளோட்டோர் பங்கேற்றனர். (ம-9)

## சா/தரப் பரீட்சை ஏற்பாடு பூர்த்தி

கொழும்பு, மே 2

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடத்துவதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சை ஆணையாளர்நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ச)

2,000 கோடி ரூபா பெறுமதியான

## 86 கிலோ ஹெரோய்னுடன் பாகிஸ்தான் கப்பல் பிடிப்பு

கொழும்பு, மே 2

சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருளை இலங்கைக்குக் கடத்தி வந்த பாகிஸ்தான் கப்பலொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கடற்றொழில் கப்பலில் இருந்த பலுசிஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த 14 பேர் இந்தியக் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ச)




**க**ண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய். எங்கள் எல்லாரிட்டையும் உந்த பிரைவேட் ஆஸ்பத்திரியள் சனத்தின்ர காசை வறுகுகிறதிலதான் குறியா இருக்குதுகள் எண்ட நினைப்பு இருக்கத்தான் செய்யுது. ஆனால் இப்ப ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரியில நடக்கிறதைப் பாக்கேக்க, இப்பிடி சனத்திட்ட கூடக்காசை அந்த ஆஸ்பத்திரிக்காரர் வாங்கேல, சிலர் வாங்க வைக்கினம் எண்டது அம்பலமாகியிருக்கு.

யாழ்ப்பாணத்தில உள்ள பெரிய பிரைவேட் ஆஸ்பத்திரி அது. அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போனா பெரும் அலைச்சல் எண்டிட்டு காசைக் குடுத்தாலும் வருத்தத்தை வேளைக்கு மாத்தவேணும் எண்டு நினைக்கிறவை வழமை மாதிரி அண்டைக்கும் உந்த பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கினம். இப்ப உந்த வெக்கையால எல்லா இடமும் கடும் காய்ச்சல் நடக்குது. அதால அண்டைக்கு அந்த பிரைவேட் ஆஸ்பத்திரி 'ஓ.பி.டி.'யில அம்பது பேருக்கும் மேல வருத்தக்காரர் காத்திருந்திச்சினம். ஆனால் அவையைப் பார்க்க டொக்டர்மார் வரேலை. என்னெண்டு விசாரிச்சா பணிப்புறக்கணிப்பாம். அரசாங்க ஆஸ்பத்திரியளிலதான் உந்தப் பணிப்புறக்கணிப்புக் கோதாரி எண்டு பார்த்தால் இஞ்சயும் அந்த வருத்தம் தொத்திப்போட்டுதோ? எண்டு வருத்தக்காரர் எல்லாரும் அங்கையிருந்து போட்டினம்.


உந்தப் பிரைவேட் ஆஸ்பத்திரி டொக்டர்மார் ஏன் பணிப்புறக்கணிப்புச் செய்யினம்? வேற என்ன, எல்லாம் காசுதான். இப்ப அங்க தாறதைவிட எல்லாத்துக்கும் ரண்டு மடங்கா காசு வேணுமெண்டு நிக்கினமாம். கொழும்பில உள்ள பிரைவேட் ஆஸ்பத்திரியளிலகூட ஒரு மணித்தியாலத்துக்கு டொக்டர்மாருக்கு 900 ரூபாதான் குடுக்கிறவை. இங்கையும் அதேயளவு காசுதான் இப்ப குடுபடுகுது. ஆனால் அது பத்தாதாம். மணித்தியாலத்துக்கு 1500 ரூபா வேணுமாம். அதைவிட போக்குவரத்து, மருந்து கட்டுறது, வருத்தக்காரரை வார்ட்டில பாக்கிறது, ஊசி போடுறது எண்டு எல்லாத்துக்கும் இப்ப தாற காசை ரண்டு மடங்காத் தரவேணும் எண்டதுதான் பணிப்புறக்கணிப்புக்காரரின்ர கோரிக்கையாம். ஆனால் கொழும்பிலயே இல்லாத அளவுக்கு இப்பிடி கொள்ளையடிக்கிறமாதிரி காசைக் கேட்டால் நிர்வாகம் என்னெண்டு குடுக்கும்? ஒருவேளை அப்பிடிக் குடுத்தாலும், அந்தக் காசை வருத்தக்காரரிட்டத்தானே அறவிட வேணும். ஏற்கனவே காசுகூட வேண்டுகினம் எண்டு எல்லா இடமும் கதை. இப்ப அதைவிடக் கூட்டினால் சனம் கொந்தளிச்சுப் போடுமெல்லோ. அதால நிர்வாகம் டொக்டர்மாரின்ர உந்த அநியாயக் காசு வசூலிப்புக்கு சம்மதிக்கேலை. இப்ப எட்டு நாளா உந்தப் பணிப்புறக்கணிப்புத் தொடருதாம்.

வருத்தக்காரரை மனிசராப் பாக்காமல், காசெடுக்கிற ஏ.ரி.எம். மிஷின் மாதிரி பாக்கிற குணம் உள்ளவை எப்பிடி ஒழுங்கா மருத்துவம் பாப்பினம்? காசுக்காக என்னவும் செய்யவும் கூடுமெல்லோ. டொக்டர்மாரை தெய்வமா நினைச்சு சனங்கள் கும்பிட்ட காலமெல்லாம் பொய்யாகி, பழங்கதையாகிப் போட்டுது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடளாவிய ரீதியில் நிலவி வருகின்ற கடும் வெப்பமான காலநிலை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர். மன்னார் மாவட்டத்தில் வெப் பத்தின் தாக்கத்தை சமாளிப் பதற்கு தர்பூசணி மற்றும் நுங்கு கொள்வனவுகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வரு கின்றனர். (ப-56-213)

## விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம், பொலிகண்டிப் பகுதியில் கஞ்சாவு டன் கைதான சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

23 வயதான சந்தேகநபரே இவ்வாறு கஞ்சாவு டன் கைதான நிலையில், அவரிடம் மேலதிக விசா ரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-125)

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணத்தில் இருவேறு இடங்களில் கசிப்புடன் இரு வரை பொலிஸார் நேற்றுமுன் தினம் கைது செய்துள்ளனர்.

சுன்னாகத்தில் சந்தேகத்துக்கி டமாக நடமாடிய ஒருவரிடம் மேற் கொண்ட சோதனை போது ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம் கல்விளானில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வட் டுக்கோட்டைப் பொலிஸார் அதேயிடத்தைச் சேர்ந்த ஒரு வரிடமிருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டுள்ள தாகவும் மேலும் தெரிவித்துள் ளனர். (ஒ-125)

## பலசரக்குக் கடைக்கு 80,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், மே 2

பல்வேறு குற்றச்சாட்டுகளுக் காக திருநெல்வேலியிலுள்ள பலசரக்குக் கடைக்கு 80 ஆயி ரம் ரூபா தண்டப்பணம் விதிக் கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சுகா தாரப் பரிசோதகர் தலைமையி லான குழுவினரால் திருநெல் வேலியில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலை யங்களில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி பரிசோதனை கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது திகதி காலாவதி யான பொருள்கள், வண்டு மொய்த்து பழுதடைந்த பொருள்கள், சுட்டுத்துண்டு உரிய முறையில் இடப்படாத பொருள்கள் என்பனவற்றை விற்பனைக்காக களஞ்சியப் படுத்தி வைத்திருந்த பலசரக்கு விற்பனை நிலைய உரிமை யாளர் இனங்காணப்பட்டார்.

அவருக்கு எதிராக கடந்த மாதம் 18ஆம் திகதி மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்குஎடுத்துக்கொள் ளப்பட்டது. இதன்போதே 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக் கப்பட்டதுடன் உணவகங்க ளின் உரிமையாளர்கள் கடு மையாக எச்சரிக்கையும்செய் யப்பட்டனர். (ஒ-26)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 2

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியா சாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஜெ.கோகு லவாசன் தலைமையில் நாளை வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை யின் விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞா னம் சிறீதரன், சிறப்பு விருந்தினராக சங் கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோர் பங் கேற்கவுள்ளனர். (ச-555)

✦✦✦✦

ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தச் செயற்பட்டு மகிழ்வோம் விளை யாட்டு விழா, சுன்னாகம் கந்தரோடையில் அமைந்துள்ள பாடசாலை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் சி.நேதாஜி தலைமையில் இடம்பெ றவுள்ள நிகழ்வில் உடுவில் கோட்டக் கல் விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் பிரத ம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள் ளார்.

✦✦✦✦

அனலைதீவு அருணோதயா முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி முன் றலில் ஆசிரியை கு.சுஜானி தலைமை யில் நடைபெறும். முதன்மை விருந்தின ராக ஓய்வுபெற்ற அதிபர் ச.விக்கினேஸ்வரி கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-ப-66,9)

## எரிக் சொல்ஹெய்ம் ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசக ரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்ச ருமான எரிக் சொல்ஹெய்ம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடை பெற்றது. இதன்போது வடக்கு மாகாணத்தின் தற் போதைய நிலை, மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றம், எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடு கள், சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நட வடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவர் கேட்டறிந்தார். (ச-27)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி களை மேற்கொள்வதற்கு உகந்த நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமா ளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண்விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் செலுத்தவும். பணிச் சுமை குறையும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்த வும். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். பொறுமை மிக அவசியம். பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

**கடகம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். உற்சாக மாக இருப்பீர்கள். இலாபம் கிடைக்கும். ஆஞ்ச நேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். காரி யங்கள் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். விற்பனையும் லாபமும் கூடும்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப பணவரவும் இருக்கும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமை யைக் கடைப்பிடிக்கவும். வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**துலாம்:** உற்சாகமான நாள். உடல் நலனில் கவ னம் தேவை. விநாயகரை வழிபட மன மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலசங்கடங்கள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**விருச்சிகம்** : எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. காரியம் அனுகூலமாக முடியும். சங்கடங்கள் ஏற்படும். பொறுமை மிக அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாத கமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வீண் செலவுகள் ஏற்படக்கூடும். இன்று தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**மீனம்:** கருத்துவேற்றுமை நீங்கி, அந்நி யோன்யம் ஏற்படும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்க ளில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நீதியே கண்திறவாய்!


இன்று மே இரண்டாம் நாள்! விடிந்தால் உலக ஊடக சுதந்திரநாள். நேற்றையநாளோ தொழிலாளர்களின் சுதந்திரத்தை வலியுறுத்தும் நாள். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட இன்றைய நாள்தான் உலக ஊடக வரலாற்றின் கறுப்புநாள் என்றால் அதில் மறுகருத்துக்கு இடமிருக்காது. 18 வருடங்களுக்கு முன்னர் இதே நாளில்தான் உலகின் மிகப்பெரிய ஊடகப் படுகொலை இருளின் துணையோடு நிகழ்த்தப்பட்டது.

தமிழ்த் தேசியப் பாதையில் தடம்மாறாது பயணிக்கும் உதயன் ஊடகப் பணிமனைக்குள் 2006ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் புகுந்த ஆயுததாரிகள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. உதயன் விற்பனை முகாமையாளரான பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாசன் மற்றும் விநியோக ஊழியரான ரஞ்சித்குமார் ராஜரட்ணம் ஆகிய இருவரும் கொலைகாரத் துப்பாக்கிகளின் பசிக்கு இரையாகினர். கணினிகள், அச்சியந்திரம் என்று எதுவுமே ஆயுததாரிகளின் கொலைவேட்டையில் தப்பவில்லை. அலுவலகம் முழுதையும் துப்பாக்கிரவைகளால் சல்லடையிட்ட பின்னரே ஆயுதக்குழு அகன்றது.

எத்தனையோ ஊடகங்கள் அப்போதும் இருக்கையில் ஏன் உதயன் மட்டும் இலக்குவைக்கப்பட்டது? ஏனென்றால் உதயன் மட்டுமே தமிழ் மக்களின் உரிமைக்குரலாக, தளராத துணிவோடு உலகெங்கும் உண்மையை உரத்துச் சொன்ன ஊடகம். பேசாப்பொருளை துணிந்துபேசிய பத்திரிகை. அரசாங்கத்தினதும், அதன் அடிவருடிகளினதும் அக்கிரமங்களையும், குருதி குடிக்கும் போரால் மக்கள் சந்திக்கும் பேரவலத்தையும் உதயன் வெளிப்படுத்தி நின்றதால், நிலைகுலைந்துபோன அதிகாரவர்க்கம், உதயனுக்கு ஒட்டுமொத்தமாக சமாதிகட்ட முடிவெடுத்தது. அதிகாரத்தின் வேட்டைநாய்கள் உதயன் மீது பாய்ந்தன. இரு உயிர்களைக் குதறிக்கொன்றுவிட்டு தப்பியோடியும் விட்டன. இந்தக் கொலைவெறித்தாக்குதல் நிகழ்ந்து 18 வருடங்கள் கழிந்துள்ளபோதும், காவுகொள்ளப்பட்ட உயிர்களுக்கு நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாக இருப்பதுதான் ஆகப்பெரும் அபத்தம்.

இந்தத் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பது ஊரறிந்த ரகசியம். 'உதயன் மீது எமது கட்சிதான் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலை நடத்தியவர்களில் சிலர் இப்போது வெளிநாட்டில் இருக்கின்றனர். ஒரு சிலர் இலங்கையில் உள்ளனர்' என்று ஜனநாயகப் பாதைக்கு திரும்பிவிட்டதாகக் கூறிக்கொண்ட ஒரு கட்சி மீது, அதே கட்சியில் பல வருடங்களாக இயங்கிய ஒருவர் இரண்டுமுறை பகிரங்க ஊடகச் சந்திப்புகளில் உண்மையைப் போட்டுடைத்திருந்தார். அந்த நபரை விசாரணை செய்தாலேயே, உதயனில் நிகழ்த்தப்பட்ட கொலையின் சூத்திரதாரிக்ளைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கலாம். ஆனால், அதைச் செய்ய அரசாங்கம் விரும்பவில்லை. ஏதேனும் ஆர்ப்பாட்டம், பேரணி என்றால் மட்டும் அதில் பங்கு பெறுபவர்களை வளைத்து, வளைத்து படம் எடுத்து, பின்னர் அவர்களின் வீடுகளுக்குச் சென்று மிரட்டும் பொலிஸாரோ, புலனாய்வுப் பிரிவினரோ அந்தப் பகிரங்கக் கொலை ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பில் அலட்டிக் கொள்ளவேயில்லை. அதன் மூலம் உதயனில் நடத்தப்பட்ட கொலைவெறித்தாக்குதலில் அரசாங்கத்துக்கும் பங்குண்டு என்பது வெட்டவெளிச்சமாகியது. ஆனாலும், அதிகாரம் ஆசைப்பட்டதுபோல உதயனின் குரல்வளையை அவ்வளவு லேசாக நசுக்கிவிட முடியவில்லை.

முன்னரைக் காட்டிலும் இன்னும் வீரியத்தோடுதான் உதயன் ஊடகப்பணியாற்றியதே தவிர அஞ்சி, நடுங்கி, அடிபணிந்துவிடவில்லை. இந்த ஓர்மமும், அர்ப்பணிப்பும், மக்களின் ஆதரவுமே உதயனின் துணிச்சலான இருப்புக்கு மூலகாரணம். அதன்பின்னரும் ஏனைய ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் இலங்கையில் வன்முறைகள் தொடரவே செய்கின்றன. 'ஊடகங்களைக் கட்டுப்படுத்த நினைப்பவன் உண்மையில் மக்களையே கட்டுப்படுத்த நினைக்கிறான்' என்று நோயம் சோம்ஸ்கி சொன்னது இன்று நிஜமாகிக் கொண்டிருக்கிறது.




நாடு முழுவதும்

# 40 மே தினக் கூட்டங்கள் பலம் காட்டிய கட்சிகள்

**கொழும்பு, மே 2**

**மே தினத்தை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களால் நாடளாவிய ரீதியில் நேற்று 40 மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.**

கொழும்பு நகரை அண்மித்து மாத்திரம் 14 மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம் பெற்றுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினப் பேரணி கொழும்பு புறக்கோட்டையில் இருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டங்கள் கொழும்பு விகாரமஹாதேவி பூங்கா மற்றும் யாழ்ப்பாணம், மாத்தறை, அநுராதபுரம் ஆகிய 4 இடங்களில் இடம்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன மைதானத்துக்கு முன்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்ரிபால சிறிசேன தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தினக் கூட்டம் கம்பஹா மாநகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இவை தவிர, ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் உள்ளிட்டவையும் பல்வேறு இடங்களில் மே தினக் கூட்டங்களை நடத்தியுள்ளன. (ச-இ)



## நட்டமீட்டிய நிறுவனங்கள் பில்லியனை குவிக்கிறதாம்

*நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்*

கொழும்பு, மே 2

நட்டமீட்டிய அரச நிறுவனங்கள் தற்போது பில்லியன் கணக்கான இலாபத்தை ஈட்டிவருகின்றன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். 2022ஆம் ஆண்டு 743 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ள அரச நிறுவனங்கள், 2023ஆம் ஆண்டில் 456 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



## அநுரகுமாரவை முந்தும் சஜித்!

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் செல்வாக்கு கடந்த மார்ச் மாதத்தில் 2 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார கொள்கைக்கான நிறுவனத்தால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே அநுரவுக்கு இருந்த ஆதரவு அலை சஜித்தின் பக்கம் மாற்றம் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

## ஜனாதிபதிக்கு நீதிமன்று தடை

பிரதம நீதியரசர் தவிர உயர்நீதிமன்றநீதியரசர்களைநியமிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்கால தடையுத்தரவு உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இந்த தடையுத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குறைவடையும் சிமெந்து விலை

கொழும்பு, மே 2

சிமெந்து மூடை ஒன்றின் விலை நேற்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 50 ரூபாவால் குறைக்கப்பட்டு ள்ளது என்று சிமெந்து தொழிற்றுறை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

**நாளை**

03.05.2024

**வெள்ளிக்கிழமை**

**சித்திரை - 20**

சுபநேரம் : 05.56 - 07.26

ராகுகாலம் : 10.26 - 11.56

**நாளொரு நல்வார்த்தை**

**கடந்து போன நிமிடத்தை விலைக்கு வாங்கி அனுபவிக்க முடிகிற அளவிற்கு இந்த உலகில் யாரும் பணக்காரர்கள் கிடையாது.**

-ஆஸ்கார் வைல்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெத்தன்யாகுவுக்கு பிடியாணை

## ஆராய்கின்றது சர்வதேச குற்றவியல் நீதிமன்று

நியூயோர்க், மே 2

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு உட்பட முக்கியமான இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணையை பிறப்பிக்கத் தயாராகின்றது என்று இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.


ஹமாஸ் அமைப்புடனான மோதல் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிரதமர் உட்பட முக்கியமான அதிகாரிகளுக்கு எதிராகப் பிடியாணையை பிறப்பிக்கலாம் என ஐந்து இஸ்ரேலிய மற்றும் வெளிநாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸ் அமைப்பின் தலைவர்களுக்கு எதிராகவும் பிடியாணைகளை பிறப்பிப்பது குறித்தும் சர்வதேச நீதிமன்றம் ஆராய்கின்றது என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றம் தனது நடவடிக்கையை தொடரத் தீர்மானித்தால் காஸாவுக்கு மனிதாபிமான உதவிகள் செல்வதைத் தடுத்தமை, ஹமாஸின் தாக்குதலுக்கு மிகக் கடுமையான பதில் தாக்குதலை முன்னெடுத்தமை போன்ற குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கு எதிராக சுமத்தலாம் என ஐந்து அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். அதேவேளை, ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த யாருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படலாம் என்ன குற்றச்சாட்டுகள் சுமத்தப்படலாம் என்ற விவரங்கள் வெளியாகவில்லை. (ஏ-இ)

# அணு ஆயுத விவாதங்களை ஆரம்பிக்க பிரான்ஸ் தயார்

## மக்ரோன் தெரிவிப்பு



பாரிஸ், மே 2

ஐரோப்பாவின் பொதுப் பாதுகாப்பில் அணு ஆயுதங்களது பங்கு குறித்து விவாதங்களைத் தொடங்குவதற்குத் தயாராக இருப்பதாகப் பிரான்ஸின் அதிபர் எமானுவல் மக்ரோன் அறிவித்திருக்கிறார். ஸ்ட்ராஸ்பூவில் வைத்து நாட்டின் கிழக்குப் பிராந்தியப் பத்திரிகை நிறுவனங்களது குழுமத்துக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏவுகணை எதிர்ப்புப் பாதுகாப்பு, நீண்ட தூரம் செல்லும் ஆயுதங்களது பாவனை மற்றும் ஐரோப்பிய மண்ணில் உள்ள சொந்தமானதும் அமெரிக்காவினதுடையதுமான அணு ஆயுதங்கள் ஆகியன தொடர்பில் புதிதாக விவாதங்களை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருப்பதாக அந்த நேர்காணலில் மக்ரோன் கூறியிருக்கிறார்.

பிரான்ஸ் தனது தனித்துவத்தைப் பேணுகின்ற அதேநேரம் ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு மேலும் பங்களிப்புச் செய்வதற்குத் தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரெக்ஸிற் மூலம் இங்கிலாந்து வெளியேறிய பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் சொந்தமாக அணு ஆயுதங்களை வைத்திருக்கின்ற ஒரே நாடாகப் பிரான்ஸ் மட்டுமே உள்ளது. தனது அணு ஆயுதங்களை அது ஐரோப்பியப் பாதுகாப்புக்காகப் பங்குபோட்டுக் கொள்ளத் தயாராகி வருவதை மக்ரோனின் கருத்து பிரதிபலிப்பதாக அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ஏ-இ)

# ஓரினச் சேர்க்கைக்கு 15 ஆண்டுகள் சிறை

லண்டன், மே 2

ஓரினச்சேர்க்கையை குற்றமாக்கும் சட்ட மூலம் ஈராக் நாடாளுமன்றில் கடந்த சனிக்கிழமையன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் குற்றத்துக்காக அதிகபட்சம் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. மத விழுமியங்களை நிலைநிறுத்தும் நோக்கில் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என ஈராக் அறிவித்துள்ளது.

முன்னதாக இந்தச் சட்டமூலம் மரண தண்டனையை உள்ளடக்கியிருந்தது. எனினும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு திருத்தம் செய்யப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில் ஈராக்கில் ஓரினச் சேர்க்கை வெளிப்படையாகக் குற்றமாக்கப்பட்டிருக்கவில்லை. (ஏ-இ)

# உக்ரைன் படையினர் மீது கத்திக்குத்து

உக்ரைன் படை வீரர்கள் இருவரை ஜேர்மனியில் ரஷ்யப்பிரஜையொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். ஜேர்மனியின் தென் பகுதியில் உள்ள வணிக வளாகமொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேர்னோவ் என்ற நகரில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் கத்திக்குத்துக்கு இலக்கான 36 வயது நபர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 28 வயது நபர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

உக்ரைன் இராணுவத்தைச் சேர்ந்த இருவரும் ஜேர்மனியில் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள [illegible] ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஏ-இ)

# ராபா மீதான தாக்குதலை தடுக்குமாறு கோரிக்கை

ஒரு மில்லியனுக்கும் அதிகளவான மக்கள் தஞ்சம் புகுந்துள்ள தெற்கு காஸா நகரமான ரஃபா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்தவேண்டும் என்று பலஸ்தீனம் அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரஃபா நகர் மீதான தாக்குதலை தடுக்கக்கூடிய ஒரே நாடு அமெரிக்கா மாத்திரமே என பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ-இ)

# ராபா மீதான படையெடுப்பு: நிர்ணயிக்கப்பட்டது திகதி!

டெல்அவிவ், மே 2

ராபா மீதான படையெடுப்பு திட்டமிட்டவாறு திட்டமிட்ட திகதியில் முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

ராபாவில் சுமார் 15 லட்சம் மக்கள் தஞ்சமடைந்துள்ள நிலையில், போர் ஒன்றை அங்கு முன்னெடுத்தால் அது மிகப்பெரும் மனிதப் பேரவலங்களுக்குக் காரணமாக அமையும் என்று அமெரிக்கா கூறுவதுடன் ராபாவில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டாம் என்றும் இஸ்ரேலைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

கட்டாரின் தலைமையில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் சமாதானப் பேச்சுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலேயே, இவை எவற்றையும் பொருட்படுத்தாமல் ராபாவில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நெத்தன்யாகு அறிவித்துள்ளார்.

'போரின் அனைத்து இலக்குகளையும் அடைவதற்கு முன்பு நாம் போரை நிறுத்துவோம் என்ற கேள்விக்கு இடமில்லை. நாங்கள் ராபாவுக்குள் தரைவழியாக நுழைவோம், மொத்த வெற்றியை அடைவதற்காக, நாங்கள் ஹமாஸ் தீவிரவாதிகளை அகற்றுவோம்' என்று நெத்தன்யாகு மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# பிரேஸிலில் 4 மாதங்களில் 40 இலட்சம் பேருக்கு டெங்கு



தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் கடந்த 4 மாதங்களில் இதுவரை 40 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 10 லட்சம் பேருக்கு டெங்கு பரவிய நிலையில் தற்போது டெங்கு 4 மடங்கு அதிகரித்துள்ளது. டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளனர்.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் இம்முறை நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக பிரேஸிலின் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. (ம)

# பலஸ்தீனப் போராட்டத்தால் அமெரிக்காவில் பிரளயம்!

சுதந்திரப் பலஸ்தீனத்துக்காக போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான அமெரிக்க மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரம் யூத மாணவர்களின் பங்கெடுப்புடன் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டங்கள் உலகின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கை வங்கிக் கிளையின் புதிய கட்டடம் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் அருள் சோசை தலைமையில் பேசாலை பிரதான பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. (எ-60)



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தில் கல்வி கற்று, இந்த வருடம் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பிரிவுபசார விழா, கல்வி நிலைய பிரதான மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-125)



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டியில் வடக்கின் உதைபந்தின் மகுடத்தை சென்லூட்ஸ் அணி தனதாக்கியது. (எ-125)





இந்த ஆண்டுக்கான தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில், வெற்றி பெற்ற வரணி மத்திய கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-159)




நெடுந்தீவு சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் புத்தாண்டு பாரம்பரிய விளையாட்டுப்போட்டி சமுர்த்தி வங்கி வளாக முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. வங்கி முகாமையாளர் திருமதி கோ.பாமினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா கேதீசன் கலந்துகொண்டார். (எ-9)



நடேஸ்வராக் கல்லூரியின் 1995 ஆண்டு (சா/த) பழைய மாணவர்களால் பாடசாலைக்கு இரண்டு வயலின், ஒரு மிருதங்கம் ஆகியன அன்பளிப்பாக அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-555)





இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் 22 ஆவது புனருத்தான ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக் கொடை நிகழ்வு இணுவில்பொதுநூலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.(எ-66)




ஊடகவியலாளர் சுரேன் கார்த்திகேசு எழுதிய 'போரின் சாட்சியம்' நூல் வெளியீட்டு விழா நிகழ்வு கனடாவின் வன்கூவரில் அண்மையில் நடைபெற்றது. (எ-100)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களகரமான திறப்புவிழா

SJ

## சத்தியா ஜீவல்லர்ஸ்



**இல.136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

43 வருடங்களாக வடமாகாண மக்களின் நன் மதிப்பை பெற்ற ஒரே ஒரு ஸ்தாபனம் சிறி நதியா நகைமாளிகையின் மற்றுமோர் உதயமாக 03.05.2024 வெள்ளிக்கிழமை காலை 6.00 - 7.00 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் அதி நவீன மயப்படுத்தப்பட்டு புதுப் பொலிவுடன் "சத்தியா ஜீவல்லர்ஸ்" என்னும் புதிய ஸ்தாபனம் ஒரே கூரையின் கீழ் மங்களகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களையும் அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எதிர்வரும் 10.05 2024 அக்ஷய திருதியையை முன்னிட்டு எம்மிடம் கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கிறோம்.

இணை நிறுவனங்கள்

NSR JEWELLERY | சிறிநதியா நகைமாளிகை | சத்தியா ஜீவல்லர்ஸ்

**T.P: 021 221 1332, 077 236 7416**

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 06 . 1948



இறப்பு 01 . 05 . 2024

### சோமசுந்தரம் கெங்காதேவி

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கெங்காதேவி நேற்று (01.05.2024) புதன்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணர் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசிங்கம், கணேஸ் மற்றும் வீரசிங்கம், தர்மலிங்கம், அம்பிகை, றஞ்சினிதேவி, பூபாலசிங்கம் (சிவன்), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமரின் அன்பு மைத்துனியும், சுபத்திராதேவி, சுவேந்திராதேவி, சுரேந்திரராசா, சியாமளாதேவி (சுவிஸ்), ரபேந்திரராசா, சுதாமளாதேவி (லண்டன்), சிவராசா (நியூலங்கா எலக்ரோனிக் கடை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலேஸ்வரன், பிரியதர்சினி (ஆசிரியர் - யா/சென் மேரிஸ் வித்தியாலயம்), சற்குணம் (சுவிஸ்), நகுலா (இந்து கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), சத்தியதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரதி - சுஜேந்திரா, மயூரன், அகீபன் (முகாமைத்துவ மாணவன் யாழ். பல்கலைக்கழகம்), தஷ்விகன், தன்விகா, கஜானன், மருணா (சுவிஸ்), தீபிகா, அக்ஷிதா, அக்ஷரா, அபிதா (அமரர்), அபிசா, அபிசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதிஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாவலடி, கேணி வீதி,
காரைநகர்.

தகவல்: குடும்பத்தினர்.
சுரேஸ் - 077 6032 504
ரவன் - 077 [illegible]
சிவா - 076 [illegible]

---

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை தனராஜா

(தனராஜ இரும்புத் தொழிலகம், சிவதுர்கா இரும்புத் தொழிலகம்)

சின்னத்துரை தனராஜா அவர்கள் கடந்த 30.04.2024 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் மகனும், தனராஜா பத்மினீஸ்வரியின் கணவரும், அமரர் துளசிகா, அபிலேஷன், லக்ஷ்மிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றாஜினி, விஜிதசிறி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பைரவி, அன்ஷிகா, யஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், பத்மலிங்கம் (அமரர்), கனகாம்பிகை (கனடா), யோகாம்பிகை, குணராணி (கொழும்பு), நவரெட்ணரா்ஜா (அமரர்), லலிதா, கலாரஞ்சினி ஆகியோரின் சகோதரனும், ராசரெத்தினம் - மல்லிகாதேவி தம்பதியரின் மருமகனும், சற்குணேஸ்வரி, தயாலினி, ராகினி, கந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

45/3A, ஞானவைரவர் கோவில் வீதி,
பலாலி றோட், கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 6310 377
077 23 85 490

(CS 385) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# நான் ஒரு வியாபாரி அதேபோல் குடும்ப வாழ்க்கையிலும் வெற்றி பெற்ற ஒருவர்.

நானே ஆரம்பம்
வெல்வோம் ஸ்ரீலங்கா
SMART சூரன்களோடு



"வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் திட்டமிட்டு செயல்பட்டேன். இதற்கிடையில் வெளிநாட்டில் ஒரு தொழிலைச் செய்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என உணர்ந்தேன். எனவே நான் சவுதிஅரேபியாவில் வேலைக்குச் சென்றேன். அங்கே வேல்டிங் வேலை தான் செய்தேன். நவீன தொழினுட்பத்தோடு எவ்வாறு வேல்டிங் வேலை செய்வது என்பதை நான் அங்கிருந்து கற்றுக் கொண்டேன். நான் இலங்கைக்கு வந்ததும் எனது அனுபவத்தைப் பயன்படுத்தி நான் ஒரு வேல்டிங் ஆலையை ஆரம்பித்தேன். இன்று நான் ஒரு வியாபாரியாகவும் குடும்ப வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒருவராகவும் இருக்கிறேன்."

ட. திருக்குமார்
மீசாலை, யாழ்ப்பாணம்

வெளிநாட்டு வேலைகளால் சம்பாதிக்கும் பணத்தை வங்கிகள் ஊடாக மட்டும் அனுப்புங்கள்...
மேலதிக பல நன்மைகளைப் பெற்றிடுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 1989**

www.slbfe.lk

## நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை முல்லைத்தீவில்

மே 03-04

மு.ப. 09.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை

## முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில்

வெளிநாட்டு வேலை தேடும் உங்களுக்கும்...

- அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
- பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
- பாடசாலைகளுக்கு 'Smart Board'
- சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள வெல்வோம் ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
அக்கரையில் மரண்டிடு இக்கரையில் கைகோர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேப்பாக்கத்தில் சென்னையை வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ்



**ஐ.பி.எல். தொடரின் 46 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ் அணி.**

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வோட் 62 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் பெரிதாகச் சோபிக்கவில்லை.

163 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி நிதானமாக வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்தது. 17.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் கிங்ஸ் அணி.

ஜொனி பர்ரிஸ்ரோ 46 ஓட்டங்களையும், ருசோ 43 ஓட்டங்களையும், சாம் கரன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். (எ-இ)



# ராஜபக்சக்களிடம் 5 கோடி இழப்பீடு

**கொழும்பு, மே 2**

**நாட்டைத் தவறான வழிக்கு இட்டுச்சென்று பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக இருந்தமைக்காக மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் ஆகியோரிடம் காலிங்க சில்வா என்ற வர்த்தகர் 5 கோடி ரூபா இழப்பீட்டைக் கோரியுள்ளார்.**

2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார இழப்பைக் காரணமாகக் கூறிய அந்த வர்த்தகர் மேற்படி இழப்பீட்டுக் கோரிக்கையை முன்வைத்து தனது சட்டத்தரணி மூலம் 'கோரிக்கைக் கடிதம்' அனுப்பியுள்ளார்.

இரு வாரங்களுக்குள் இந்தப் பணத்தைச் செலுத்தாவிடின் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்போவதாகவும் அந்த வர்த்தகர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்துவரும் அந்த வர்த்தகர், 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டதாலும் டொலரின் பெறுமதி அதிகரித்ததாலும் தான் மிகப் பெரும் இழப்பைச் சந்தித்ததாக அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமைக்கு ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சியே காரணம் என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் தனது கோரிக்கைக் கடிதத்தில் காலிங்க சில்வா குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். (ம-6)



## வங்குரோத்து அவமானத்துடன் ரணில் களமிறங்கப்போவதில்லை

கொழும்பு, மே 2

நாடு வங்குரோத்து நிலையிலி ருந்து மீண்டுவிட்டது என்ற உத்தரவாதத்தை சர்வதேசம் வழங்கிய பின்னரே, ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என அறிய முடிகின்றது.

ஜூன் நடுப்பகுதியில் வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை மீண்டுவிட்டது என்ற அறிவிப்பு வெளிவரவுள்ளது எனவும் தெரியவருகின்றது. அதுவரை நலன்புரித் திட்டங்களை முன்னெடுப்பதெனவும், முன்கூட்டியே தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை விடுத்தால் அது நலன்புரித் திட்டங்களைப் பகிரும் விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

தான் சுயாதீன வேட்பாளராக களமிறங்க உத்தேசித்துள்ளதால் வெளியில் இருந்துகூட பலரும் ஆதரவு வழங்கலாம் என்ற கருத்தையும் தனக்கு நெருக்கமானவர்களிடம் ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் அறிவிப்பை மே தினக்கூட்டத்தின்போது விடுக்கு மாறு ஜனாதிபதியிடம் ஐக்கிய தேசியக்கட்சி பிரமுகர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-44)

## பல்கலைக்கழகங்களில் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 2

நாடளாவிய ரீதியில் அரச பல்கலைக்கழகங்களில் இன்று நண்பகல் முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட்டும் இதுவரை தீர்வு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பின் கடந்த மாதம் 29ஆம் திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-66)

## பீரிஸின் நிலைப்பாட்டை வரவேற்கும் சர்வேஸ்வரன்

ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோரும் ஜி.எல். பீரிஸ் தமிழ் மக்களுக்கும் சர்வதேச உதவியுடன் நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஜி.எல்.பீரிஸ், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கோ நாட்டின் ஏனைய மக்களுக்கோ நம்பிக்கை கிடையாது. சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைக்கான விசேட பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

எனவே உயிர்த்த ஞாயிறன்று பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க பீரிஸ் கூறிய அதே அடிப்படையில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலப்புப் பொறிமுறை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாலும் பல்லாயிரம்பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தமிழருக்கும் நீதி கிடைக்க நாடாளுமன்றத்தில் பேசி வலியுறுத்துவீர்கள் என நம்புகிறோம்- என்றார் சர்வேஸ்வரன். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் காவலன் அல்லன்: சுதந்திரக் கட்சியின் மீட்பன்

*நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு*

நான் மைத்திரிபால சிறிசேனவின் காவலன் அல்லன். சுதந்திரக் கட்சியை மீட்கவே வந்துள்ளேன். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கட்சியைப் பலப்படுத்தமுடியும் என்று சுதந்திரக் கட்சியின் பதில் தலைவரான மைத்திரிபால தரப்பால் நியமிக்கப்பட்டவரும், நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நான் பதவிகளுக்காகச் சண்டையிடுபவன் அல்லன். சுதந்திரக் கட்சியை கைப்பற்றும் நோக்கமும் கிடையாது. கட்சியை கட்டியெழுப்பவேண்டும் என்ற நோக்கிலேயே பதவியை ஏற்றேன். இதன் பின்னணியில் வேறு சூழ்ச்சி எதுவும் இல்லை. சுதந்திரக் கட்சியில் உள்ள எந்தவொரு தரப்புடனும் எனக்கு பிரச்சினை இல்லை. நிமால் சிறிபாலடி சில்வா, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்டவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன்.

கட்சியின் மே தினக் கூட்டம் கம்பஹாவில் நடைபெறவுள்ளது. கட்சி உறுப்பினராக அதில் நான் பங்கேற்பேன். ஏனையோரும் பங்கேற்கலாம். ஒன்றிணைந்தால் கட்சியைப் பலப்படுத்தலாம். கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயார். எனினும், இது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை - என்றார். (ஒ-44)

## வரும்...

தெரிவித்துள்ளார். வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம், நெடுங்கேணி மற்றும் மடு ஆகிய இடங்களில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் 42 பாகை செல்சியஸுக்கும் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. அதேவேளை - உணரக்கூடிய வெப்பநிலை 44 பாகை செல்சியஸாகப் பதிவாகியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தற்போது கிடைக்கும் வெப்பச் சலன மழை இன்னும் ஓரிரு நாள்களுக்குத் தொடரும். செறிவான இடி, மின்னலுடன் மழை கிடைக்கும் என்பதால் மக்கள் மின்னல் தாக்கம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். ஆயினும் மழை தற்போது நிலவும் அதிக வெப்பநிலையைக் கட்டுப்படுத்தப் போதுமானதாக இருக்காது. அதேநேரம் எதிர்வரும் 9ஆம் திகதிக்குப் பின்னர் வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாக வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-20)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 08.09.1946
உதிர்வு 01.05.2024

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர் **கனகரத்தினம் சஜீவ்** அவர்களுடைய பாசமிகு தந்தை


**Dr.வேலுப்பிள்ளை கனகரத்தினம்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஒடையம்பதி கற்பக விநாயகர் திருவடிகளை பிரார்த்தனை செய்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**

(CS 383)A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 07 . 1962
மறைவு 29 . 04 . 2024

### இராஜநாயகம் சிவகுமாரன் (பவுண்)

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராஜநாயகம் சிவகுமாரன் (பவுண்) அவர்கள் (29.04.2024) அன்று திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலம் சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சுப்பையாஇராஜநாயகம், இளைப்பாறிய அதிபர் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) பரமேஸ்வரி இராஜநாயகம் தம்பதிகளின் செல்வப் புதல்வனும், கீதா (இங்கிலாந்து), அவர்களின் அன்புச் சகோதரனும், நரேஸ்குமார் (இங்கிலாந்து), அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (02.05.2024) காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் (கல்லூரி ஒழுங்கை மானிப்பாய்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும், இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**இலங்கை : 076 888 5205**
**UK : 0044 793 031 2258**

**தகவல்:**
**சகோதரி கீதா**

(CS [illegible]) V-1

## மரண அறிவித்தல்



### திருமதி றொசாறியோறாணி பாக்கியநாதன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றொசாறியோறாணி பாக்கியநாதன் அவர்கள் நேற்று (01.05.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் - அமலோற்பவம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற குருசுமுத்து - ஆரோக்கியம் தம்பதியரின் மருமகளும், குருசுமுத்து பாக்கியநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கியோமர் அல்பிறட் மற்றும் இம்மானுவேல், ஜெராட் (பிரான்ஸ்), கிளேறா பிறான்சிஸ்கா (ஆசிரியர், யா/ உடுவில் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் இமெல்டா புஸ்பம், மற்றில்டா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்ரன் செபமாலை, ஆரோக்கியநாதன் அவர்களின் மைத்துனியும், கிறிஸ்ரினா (பிரான்ஸ்), கிறிஸ்ரி அருள்றாஜன் (Manager - Procurement & Stores, Tokyo Cement Company (Lanka) PLC), அருட்பணி, கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி), கிறிஸ்ரீன் றோஸ் (சட்டத்தரணி - இலங்கை (கனடா)), கிறிஸ்ரி ஜோசவ் கருணறாஜன் (North & East Area Sales Manager, Sigiri Roofings) ஆகியோரின் அன்புத் தாயாரும், அல்பேர்ட் பீரிஸ் (பிரான்ஸ்), நெவில் கொன்சலெற் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - திருகோணமலை), ஆன்ஞலோ ஞானேஸ்வரன் (கனடா), தர்மபாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கண்டாவளை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்னோலின் பிரியங்கா (பிரான்ஸ்), அட்றியன் (பிரான்ஸ்), ஆர்னோ (பிரான்ஸ்), அலன் (பிரான்ஸ்), டெபோறா (கனடா), கத்தலின் (கனடா), றொசைறோ, நயோமிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் பூத உடல் நாளை (03.05.2024) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து பி.ப 3.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆரோக்கிய வாசம்**
**டாக்டர் சுப்பிரமணியம் வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (O.M.I)**
**077 241 8647 மகனும்**
**அவரது குடும்பத்தினரும்.**
**கிறிஸ்ரி அருள்றாஜன்-077 3733 480**
**கிறிஸ்ரி கருணறாஜன் - 076 2380 837**

(CS 391) A-1

## மரண அறிவித்தல்



மண்ணில் 07 . 04 . 1952
விண்ணில் 01 . 05 . 2024

### திருநாவுக்கரசு மகேந்திரன்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், அம்பாள் வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மகேந்திரன் அவர்கள் நேற்று (01.05.2024) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - பராசக்தி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகம்மா காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் இந்திராணி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பிறேமநாயகியின் (அமுதா) அன்புக் கணவரும், தர்சிகா (லண்டன்), மயூரன், மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார் (லண்டன்), நர்மிலா, துளசிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிதின், கவின், கிரன், கேசிகன், லருசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், இந்திராணி, காலஞ்சென்றவர்களான செல்வராணி, ஜெயராணி மற்றும் விஜயராணி, காலஞ்சென்ற ஜீவராணி மற்றும் சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தேவராசா, பாலசுப்பிரமணியம், அமரர் நிமலராசா, சிறிதரன், சுந்தரராஜா, சாந்தி, சிறிகாந்தன், ஸ்ரீநாதன், ஸ்ரீகுமார், ஸ்ரீகண்ணன், உமா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு பி.ப 02.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 349 9674**
**077 644 1614**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 00389) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதியாகப் பதவியேற்கும்போதே மீண்டுமொருமுறை போட்டியிடமாட்டேன் என்ற உறுதிமொழியை நான் வழங்கி இருந்தேன். எமது கட்சியின் சார்பில் விஜய தாஸ ராஜபக்ச போட்டியிடுவார். கட்சியில் உள்ள பெருவாரியான உறுப்பினர்கள் அவரை விரும்புகின்றனர்.

நாம் பின்னால் இருந்து அவருக்கு ஆதரவு வழங்குவோம்.

சுதந்திரக் கட்சியில் இருந்து அரசுப்பக்கம் சென்றுள்ளவர்களால்தான் கட்சிக்குள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அரசில் இருந்தே எமது பக்கத்துக்கு விஜயதாஸ ராஜபக்சவை எடுத்துள்ளோம் - என்றார்.

(அ-எ-44)



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

## கூறுவிலை கோருதல்

ஆலய பாவனையிலுள்ள சுவாமி காவும் வாகனங்களுக்கான வர்ணம் பூசுவதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

01. கூறுவிலைப் படிவத்தை 1000/= செலுத்தி ஆலய நிர்வாகப் பணிமனையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
02. ஆலய வர்ணப்பூச்சு வேலைகளில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
03. ஆலயத்திற்கு வருகை தந்து வாகனங்களை பார்வையிட்டு கூறுவிலையினை பூரணப்படுத்தலாம்.
04. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப் படிவத்தினை நிர்வாகப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ செயலாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகவரிக்கோ 11.05. 2024 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்
ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## பகிரங்க ஏலம்

01. இரும்பு/அலுமினியப்பொருட்கள்

ஆலய பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இரும்புகள் மற்றும் அலுமினிய பொருட்கள் என்பவை 2024.05.11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

1.1 பொருட்களைப் பார்வையிட விரும்புபவர்கள் ஆலய நிர்வாக பணிமனையுடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.

1.2 ஏலத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1.3 அன்றைய தினம் பொருட்களை தாங்களே கோயில் வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

02. தற்காலிக கடைகள் அமைத்தல் /உடைதேங்காய்

கோவிலின் 2024 ஆம் ஆண்டின் உயர்திருவிழா 2024.06.07 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி 2024.06.22 ஆம் திகதி அன்று நிறைவுபெறவுள்ளது. அக்காலப் பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடைதேங்காய் என்பவற்றுக்கான பகிரங்க ஏலம் 2024.05.11 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம்பெறும். ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2.1 குளிர்பானக்கடைகள் நடத்துவோர்கள் முறையான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருப்பதோடு சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் பேணவேண்டும்

2.2 தேநீர் கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2.3 ஏலத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்வதோடு மீதித்தொகையினை பத்தாம் நாள் மகோற்சவத்திற்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்
ஸ்ரீநயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 09 . 1946



மறைவு
01 . 05 . 2024

### Dr.வேலுப்பிள்ளை கனகரத்தினம்

(Rtd.வைத்திய கலாநிதி, கோண்டாவில்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் ஞான வைரவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.வேலுப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் நேற்று (01.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற முத்துரத்தினம் - தவமணி தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், அனோஜா (கனடா), Dr.நிரோஜா, சஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேல்தாஸ் (கனடா), Dr.விமலராஜன் (எலும்புமுறிவு சத்திரசிகிச்சை நிபுணர்), இந்துகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்ஷிகா (கனடா), மகிரா (கனடா), விகாஷி, கேஷிகா, நிக்ஷிதா, தேஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், விஜயரத்தினம் (சட்டத்தரணி), காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற பத்மாதேவி மற்றும் ரோகிணிதேவி, காலஞ்சென்ற மாலினிதேவி மற்றும் தவரட்ணம், வசந்தாதேவி, காலஞ்சென்ற கனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜசிங்கம், தர்மஜெயசூரியர் மற்றும் உமா ஆகியோரின் சகலனும், Dr.டயானா (அவுஸ்திரேலியா), பிரஷாத், ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் பெரிய தந்தையும், ஜெனினி, உஷேந்தன், ஜெயந்தன், சுதாஜினி ஆகியோரின் சிறிய தந்தையும், ஜெலானி, தர்ஷிகா, மோகனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞான வைரவர் கோவில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
க.கமலாதேவி (மனைவி) 076 755 5927
க.சஜீவ் (மகன்) 076 645 2877

(CS 003 S-1)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவப்பிரகாசம் சவுந்தரம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் மணற்காடு காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் சவுந்தரம் நேற்று (01.05.2024) புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் கந்தர் குழந்தைவேலுவின் அன்பு மகளும் முருகேசு சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் கோவிந்தி முருகேசு-தங்கமுத்துவின் அன்பு மருமகளும், சிவானந்தன் (பல்பொருள்வாணிபம்-நொச்சிகாமம்), சிவகுமாரன் (அம்பாள் அரிசி ஆலை சண்டிலிப்பாய்), சிவமலர் (ஆசிரியர் ஸ்ரீநாகராஜா வித்தியாலயம் வவுனியா), சரவணபவன் (ஜேர்மனி), தேவமலர் ஆகியோரின் தாயாரும், நாகேஸ்வரி, கிருஷ்ணரூபி, லோகேஸ்வரன் (நவதானியம் ஸ்ரோர்ஸ், வவுனியா), சிவதர்சினி (ஜேர்மனி), கனகேஸ்வரன் (வியாபரம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்.

நிஷாந், சுலக்ஷன், விதுன், செந்தூரன், கபிலன், பவிதரன், கோபிதரன், ஹம்ஷிதரன், சாருகா, கிருஷா, மிதுஸ், தனோஸ், கேசனா, தனனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 83/6 தஞ்சைலேன், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக நீலகிரி மயானம், பலகாடு காரைநகரிற்கு பூதவுடல் காலை 7.00 மணியளவில் (02.05.2024) எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 387) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## குமரையா தேவராஜன்



தோற்றம்
05.07.1950

மறைவு
01.05.1977

நினைவுகள் மாறவில்லை
ஞாபகங்கள் ஒழிவதில்லை
உன் வழிவந்த பாசப்பறவை
களில் என்றும் நித்தியத்திற்கும்
நிரந்தமாய் நீ வீற்றிருப்பாய்
உன் நினைவுகளில் வாழும்

**திருமதி தேவராஜன்**
**டீல் தேவராஜன் - ஜெசி தேவராஜன்**
**சன்ரல் தேவராஜன்**
**சஞ்சேஸ் தேவராஜன்**
**சவ்றோ தேவராஜன்**

**சசி தேவராஜன் நிருபா தேவராஜன்**
**ராஜன் தேவராஜன்**
**ஜெய்ல்டன் தேவராஜன்**
**அஸ்ரன் தேவராஜன்**
**உற்றார் உறவினர்**

**சோமசுந்தரம் அவனியு**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

## முன்னிலை...

அடுத்துவரும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் எமது கட்சி களமிறங்கும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஜன நாயக முறைமைக்கு அச்சுறுத்தல் எனக் கருதுகின்றோம். எனவே, அம்முறை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே உள்ளோம். எனினும், அரசியல் வாய்ப்பை, அரசியல் தலையீட்டைக் கருத்திற்கொண்டு தேர்தலில் போட்டியிடு வோம். இடதுசாரி சக்திகளுடன் பொது வேலைத்திட்டத்துடன் களமிறங்குவோம். வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெ டுக்கவில்லை - என்றார்.

(அ-எ-44)

# மரண அறிவித்தல்

## சரவணை நன்னித்தம்பி



தோற்றம் 18.06.1938 — மறைவு 29.04.2024

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வரிசப்புலம் சுன்னாகத்தை வசிப்பிட மாகவும் கொண்ட சரவணை நன்னித் தம்பி (ஓய்வு நிலை தபால் நிலைய உத்தி யோகத்தர்) அவர்கள் 29.04.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - குட்டான் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முரு கேசு - ராசம்மா தம்பதியரின் மருமகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், நந்தசிறி (கண்ணன் - லண்டன்), நந்த கிரி (ராகவன் - லண்டன்), நந்தநேசன் (பவா - கனடா), நந்தராஜன் (பகவான் - லண்டன்), சௌபாக்கியலட்சுமி (துளசி) காலஞ்சென்ற தாட்சாயினி (வேணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துர்க்காதேவி, சுறோஜினி, கலைச்செல்வி, ஜெயக்குமாரி, விமலகுமார் (சின்னாம்பி விமல் ஒளி அமைப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தக்சயன், அக்சயன், திலக், லக்ஷனா, நிஷா, நிவாஸ், மனிஸ், அபினாஸ், ஜெயப்பிரியன், மனோப்பிரியன், கனிஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சத்தியநாதனின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.05.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 537 2961
076 943 4108

(CR/42327) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 12 . 1939 — மறைவு 27 . 04 . 2024

## திரு.முத்து நடராஜா

**(ஓய்வு பெற்ற கணித பாட ஆசிரியர், பகுதித் தலைவர், யாழ்.இந்துக் கல்லூரி)**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து நடராஜா, அவர்கள் கடந்த சனிக்கிழமை 27.04.2024 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்து - பார்வதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, பரமேஸ்வரி (பவளம்) மற்றும் மாணிக்கவாசகர், சின்னம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேஷின் அன்பு மைத்துனரும், ஜெயவதனி, ஜெசினா, ஜெயவாணி, அருள்குமார், சசிகுமார் (ஆசிரியர், யாழ்.இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாயகம், இலங்கைநாதன், சிறிதரன், தெய்வநந்தினி, திருவாகினி (சமுர்த்தி முகாமையாளர், நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தவநிதா, பிரியநிதா, செல்வநிதா, நவநீதன், சுதர்னன், அர்ச்சனா, அனிஸ், ரனிசியா, டருண், வனிஷா, கம்சிகா, அஷ்வின், ஆருக்ஷி, அதிஷ்ரன், ஆகியோரின் அன்புப் பேரனும், அரன்யா, பிரனீஷ், ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில், அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**பட்டினசபை ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

(CS 00388) S-1

**076 651 5684, 075 814 4993**

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 12 . 1979 — மறைவு 25 . 04 . 2024

## நளாயினி பாஸ்கரன்

புத்தூர் வடக்கு ஏரந்தனையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நளாயினி பாஸ்கரன் கடந்த 25.04.2024 வியாழக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேதுபதி - பாறுவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், பாஸ்கரனின் அன்பு மனைவியும், கஜீனா, பிரனுஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், தெய்வேந்திரம், சூரியகுமார், சந்திரகுமார், கிருஷ்ணகுமார், பாலகுமார், சிவகுமாரி, ஜெயகுமாரி, கலாதேவி, நளினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராணி, யாழினி, ஜெயரூபா, உதயா, ராஜினி, முருகானந்தம், அருணாகுலசிங்கம், தயாபரன், பிரபாகரன், லீலாவதி, சந்திரவதி, இராஜநாயகம், சிவனேசன், செல்வவதி, விஜயநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.05.2024 இன்று காலை 10.30 மணியளவில் Langenhorst 100 3085 HR Rotterdam நெதர்லாந்தில் நடைபெற உள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
கணவர் - பாஸ்கரன் +31 624 893 081

தகவல்:
குடும்பத்தினர்.

(CR/42328) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி செய்யத் தெரியாது

தேசிய மக்கள் சக்தியால் இந்நாட்டை ஒரு வருடத்துக்கேனும் ஆளமுடியாது. மீண்டும் ரணில் விக்கிரம சிங்கவுக்கே அழைப்பு விடுக்க நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரான முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் வழியே நாட்டை மீட்கும் வழியாகும். இந்த வழியை மாற்ற முற்பட்டால் அழிவுதான் ஏற்படும். அன்று முதல் நாம் உண்மை நிலைவரத்தை கூறிவருகின்றோம். நெருக்கடியான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்று, மீட்பதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார். அதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புகின்றோம். பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்தால் மிகப் பெரிய நெருக்கடி நிலைமை ஏற்படும். தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி வழங்கப்பட்டால் அவர்களால் ஒருவருடமேனும் நாட்டை ஆள முடியாது. மீண்டும் ரணிலைத்தான் அழைக்க நேரிடும். ஆகவே, ரணிலுக்கு ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும். அதன்பின்னர் தேவையெனில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்-என்றார். (ஓ-44)

## 7ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



**அருள்வதனன் டொறின் மேரி**

தோற்றம்
03.06.1976

மறைவு
02.05.2017


*ஏழு ஆண்டுகள்
ஈந்தவள் இன்றி கடந்ததுவோ
பார் மேகம் எங்கும்
பார்க்கும் போது தெரிகிறாயே!
அம்மா உந்தன் அன்பினிலே
அன்புப் புதல்வர்கள் நனைகிறோமே!
ஆறாய் ஓடும் கண்ணீரில்
ஆறுதல் தர யார் உள்ளனர்!*

மாகியம்பிட்டி,
சண்டிலிப்பாய்.
077 645 0304

கணவர் - அ.அருள்வதனன்
பிள்ளைகள் சபிஷன், றிஷாநாத்,
நியோஷன்.

(CS/54852) J-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா அன்னலிங்கம்**

ஆண்டுகள் மூன்று போனாலும் அப்பா
ஆறவில்லை எம் துயரம்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தோற்றம்
21.07.1947

மறைவு
04.05.2021


புலவனார் வீதி,
கல்வியங்காடு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS28542) J-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
06 . 09 . 1950



ஆண்டவன் கையில்
01 . 05 . 2024

### சின்னத்துரை சண்முகராசா

(காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்)

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகராசா அவர்கள் நேற்று (01.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் அமரர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் அமரர்களான கணேசன் - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயபவானி (யமுனா) அவர்களின் அன்புக் கணவரும், சாம்பவியின் பாசமிகு தந்தையும், சிங்கராசா (அமெரிக்கா), லலிதாராணி (அராலி), வனிதாராணி (அராலி), சந்திரகலா (லண்டன்), விஜயராணி (ஆசிரியை, யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி), செல்வராணி (ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை), கமலராணி (பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளர், இளவாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயபவன் (றஞ்சன் - லண்டன்), மணிபவன் (மோகன் - கொழும்பு), பத்மபவன் (வசந்தன் - அராலி), Dr.கிருஷ்ணபவானி (கீதா - தேசிய வைத்தியசாலை, கொழும்பு), சுகுணபவானி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வசந்தாதேவி (அமெரிக்கா), பன்னீர்ச்செல்வம், செல்வராசா, இராசலிங்கம், அருள்நேசன், சற்குணராசா, சிவநாதன் மற்றும் சூரியஜோதி (லண்டன்), விக்கினராசா (கொழும்பு), நிர்மலன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 664 9005
076 573 2165
077 321 2161

அராலி

(CS..38..)-1

## மரண அறிவித்தல்



### தனபாலசிங்கம் மணிமேகலை

சாந்தை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் மணிமேகலை கடந்த 29.04.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூலோகம் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிறீவண்ணன் (ஜேர்மனி), நந்தீஸ்வரன் (கனடா), வசந்தரூபன் (கனடா), றஞ்சன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் -சங்கானை), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலனி (ஜேர்மனி), ராஜினி (கனடா), தர்மினி கனடா), மஞ்சுளா (கணக்காளர் சுகாதாரத் திணைக்களம் - கிளிநொச்சி), செல்வரெட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், ராகவி, தசானா (ஜேர்மனி), சஞ்சுதன், தேஸ்மிகா ஆகியோரின் ஆசை அப்பம்மாவும், மதுசன் (கனடா), அனோஜன் (கனடா) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, ஞானம் மற்றும் கருணாகரன், சூரசங்காரன், ஜெயக்கொடி, பரமசிவம், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, கலைவாணி, பஞ்சலிங்கம், தேவராணி, சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 869 2124

அரசடி வீதி,
இடும்பன் கோவில் சந்தி,
காலையடி, பண்டத்தரிப்பு.

(CS371) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பாளர்...

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நேற்று மே தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
கிளிநொச்சி பிள்ளையார் ஆலய முன்றிலில் பேரணி ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் மே தின நிகழ்வுகள் நடைபெற்றன.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், மனோ கணேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

**இலங்கை ஆசிரியர் சங்கம்**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மேதின எழுச்சிப் பேரணி நல்லூர் கிட்டுப் பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.
பேரணியில் கலந்துகொண்டவர்கள், அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு, சகல பாடசாலை மாணவர்களுக்குமான போசாக்கு நிலையை உறுதிப்படுத்து!, மலையக மக்களின் கல்வி அபிவிருத்திக்கான செயற்பாடுகளைத் துரிதப்படுத்து, அடக்குமுறைச் சட்டவரைவுகளை நீக்கு!, தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக இறைமை, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்கு, கல்வி மற்றும் அரச சொத்துகளை தனியார் நிறுவனங்களுக்கு விற்கும் முயற்சிகளை நிறுத்து உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளுடன் கோஷங்களும் இதன்போது எழுப்பப்பட்டன.

**தேசிய மக்கள் சக்தி**

தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தலைமையில் நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலை அரங்கில் இடம்பெற்றது.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகர் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி**

புதியஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின நிகழ்வு 'உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம், நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று காலை வவுனியாவில் இடம்பெற்றது.
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய மேதின ஊர்வலம் பஜார் வீதி ஊடாக வவுனியா நகரமண்டபத்தை அடைந்து அங்கு பிரதான மேதினக்கூட்டம் இடம்பெற்றது.
மேதினப்பேரணியில் உணவுப்பொருள்கள், எரிபொருள்களின் விலைகளைக் குறை, நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை நாசமாக்காதே உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி**

ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் மே தின நிகழ்வுகள் நேற்றுக் காலை வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபையில் 'சிறிலங்கா அரசுக்கு எதிரான அடக்குமுறைகளைத் தகர்த்தெறிவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.
இதில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்,ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்,ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ,ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் , மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான சபா குகதாஸ், பா.கஜதீபன், முன்னாள் தவிசாளர்கள் , பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ச-125-110-20-66-113)

## தமிழருக்குத்...

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அடி முடி கண்டறியப்படும். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.
பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கும் உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். நாட்டில் கொலைக் கலாசாரம், இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம், பயங்கரவாதத்துக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.
பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களையும் இணைத்துக்கொண்டு அரசியல் பிரச்சினைகளுக்கு குறிப்பாக சிங்களம் அல்லாத மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை வழங்கநடவடிக்கை எடுப்போம். 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார். (அ-எ-44)

## மலையகத்...

இவ்வாறு தெரிவித்தார்.
"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. கடந்த மூன்றாண்டுகளாக சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.
இம்முறை அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா அவசியம் என மலையகத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின. அதை வழங்குவதற்கு கம்பனிகள் மறுத்தன. இதனால் சம்பள நிர்ணயசபை பேச்சும் தோல்வியில் முடிவடைந்துவந்தது.
இந்தநிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரத்து 350 ரூபா வழங்கப்படவேண்டும் எனவும், விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவேண்டும் என்றும், அந்தவகையில் நாளொன்றுக்கான மொத்தக் கொடுப்பனவாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படவேண்டும் எனவும் ஆணையிட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே கொட்டகலையில் நடைபெற்ற கூட்டத்தின்போது சம்பள உயர்வு தொடர்பான அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்." (அ-எ-44)

## ஓடு...

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. வீட்டிலிருந்த 3 பவுண் தங்க நகைகள், சுமார் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.
வீட்டின் ஓட்டைப் பிரித்து உள்நுழைந்த 3 பேரைக் கொண்ட கும்பல் ஒன்று கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. மூதாட்டியின் வாயைப் பொத்தி அச்சுறுத்தி அந்தக்கும்பல் நகை, பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கோப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சம்பவ இடத்துக்குச் சென்ற தடயவியல் பொலிஸாரும்விசாரணைகளை முன்னெடுத்தனர். மோப்ப நாய் கொண்டுவரப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## தமிழர்களின்...

மே தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தொழிலாளர்களை அதிகம் கொண்டது தமிழ் சமூகம். இந்தச் சமூகம் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது. எமக்கெதிரான அனைத்து அடக்குமுறைக்கு எதிராகவும் போராடுவோம். ஆயுதப் போராட்டம் நின்று போயிருக்கலாம். ஆனால் போராட்டம் தொடரும். இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை என்பது மாற்றப்படவேண்டும், மீண்டும் இலங்கை சுபீட்சமாக மாற வேண்டும் என்பதையே இலங்கை அரசாங்கம் கூறுகின்றது. இலங்கையில் தனியே பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமன்றி, தேசிய இனப்பிரச்சினை ஒன்றும் காணப்படுகிறது.
தமிழர்கள் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டிய தேவையுள்ளது. நீங்கள் இன்னும் பிழையான வழியிலேயே பயணிக்கின்றீர்கள், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதைச் சிங்கள வேட்பாளருக்கு - சிங்கள மக்களுக்கு நாம் சொல்லவேண்டும் - என்றார். (அ-எ-125)

## லாண்ட் மாஸ்டரை...

நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை நடந்துள்ளது. லாண்ட்மாஸ்ரரில் பயணித்த மூவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஹைஏஸ் வாகனத்தில் பயணித்த சிறுமியும், லாண்ட் மாஸ்ரரின் சாரதியும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து வெளிநாட்டவர்களை ஏற்றிக்கொண்டு யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த லாண்ட் மாஸ்ரருடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது.
விபத்தில் லாண்ட் மாஸ்ரரின் பின்பக்க பெட்டியிலிருந்து பயணித்த கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ம.சதீஸ்குமார் (வயது-38) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.
விபத்து தொடர்பில் ஹைஏஸ் வாகனச் சாரதியை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ச-26-131-555)


# மரண அறிவித்தல்

பிறப்பு
13 . 10 . 1947



இறப்பு
28 . 04 . 2024

**நடராசா சண்முகராசா**

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சண்முகராசா 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், சர்மிலா, பிறேமிலா, சசிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரூபன், சரவணபவன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெதுசன், ஜானுகா, திவ்யா, திலுக்சிகா, பிரணவன், ஹரிஸ், சஞ்சனா, சஞ்சீஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.05.2024 இன்று இல 118 ஆனந்தன் வடலி வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 118 ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.


(CS/54891) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 07 . 1965

இறப்பு 30 . 04 . 2024



## சோமசுந்தரம் கேதீஸ்வரன்

இல 40 D8 உருத்திரபுரம், கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கேதீஸ்வரன் அவர்கள் (30.04.2024) செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நேசமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மோகனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஈஸ்வரபிரியா (சட்டத்தரணி - கொழும்பு), கீர்த்தனா (Memorial University - Canada), துளசிகா (தாதியர் பயிற்றுநர்), டிலக்சன், டிலோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரநாதசர்மா (கிளி. மீனாட்சி அம்மன் ஆலய குருக்கள்), மாறன் (Canada), நிசாந்தன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதீரன், சுபர்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன் (விக்கி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராயேஸ்வரி, சிவம், நகுலேஸ்வரி (லண்டன்), DR. ராதா (கொழும்பு தேசிய வைத்தியசாலை), காலஞ் சென்ற காந்தரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.05.2024 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 273 3908**
**076 637 8434**

(CS/54889) J-1

தகவல்:
குடும்பத்தினர்.

## உதயனுக்குள்...

விற்பனை முகாமையாளர் சுரேஷ் சகாயதாஸ், பணியாளர் ரஞ்சித் ராஜரட்ணம் ஆகியோர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர்.

யாழ். நகரம் முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் நடைபெற்ற இந்தக் கொடூரக் கொலைகள் நடந்து 18 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் இன்னமும் நீதி எட்டாக்கனியாகவே இருக்கின்றது. (அ-எ)

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள இரும்புக்கடைக்கு பொருள் வழங்குவதற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **075 617 8008**

## காணி விற்பனைக்கு

மன்னாரில் செபஸ்ரி வீதியில்
வைத்தியசாலைக்கு
அருகாமையில்
**2 பரப்புக் காணி**
**விற்பனைக்கு உண்டு.**

(CS/54892) J-1

தொடர்பு :- **077 248 7204**

## கார் விற்பனைக்கு உண்டு

Nisan Sunny Ex saloon
FB 15 WP JA XXXX
இலக்க கார்
**விற்பனைக்கு உண்டு.**

(CS/54877) J-1

**077 199 6117**

## வாடகைக்கு

யாழ் கன்னாதிட்டியில் சிவன் கோயிலுக்கு அருகாமையில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட **கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.** (Attach Bathroom வசதியும் உண்டு). எதிர் வரும் 04.05.2024 இல் **இருந்து வாடகைக்கு விடப்படும்.**

**குறிப்பு :- வைத்திய கிளினிக், கல்வி நிலையம், நகை வியாபாரம் போன்றன நடத்துவதற்கு உகந்தது.**

தேவை ஏற்படின் மேல் மாடிகளில் உள்ள இரண்டு அறைகள் அனைத்துத் தளபாடங்களுடன் **வாடகைக்கு விடப்படும்.**

(CS/54893) J-1

**077 030 4951, 077 869 4913, 077 832 1564**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## சுசீலனாதேவி தில்லைராஜன்

(CTB மணியம் சகோதரி - குஞ்சம்மா)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுசீலனாதேவி தில்லைராஜன் நேற்றுமுன்தினம் (30.04.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான பருத்தித்துறை மாதனையூர் இராசதுரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், தில்லைராஜனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சுப்பிரமணியம் (C.T.B. மணியம்), யோகமலர், இரத்தினசிங்கம் மற்றும் பேபிரரோஜா, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாநிதி, நந்தினி, சதீஸ்குமார், சுசியந்தினி, சுஜீத்தா, பிரதிஸ்குமார், பிருந்தா ஆகியோரின் அன்புச் சித்தியும், சிந்துஜா, கிரிசாந், ரவிசாந், வினோசாந், ரகுசாந், பரிசாந், சரத்பாபு, சசிகுமார், சங்கீதா, விவேக் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், தேவமனோகரன் மற்றும் சகுந்தலாதேவி, வசந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(cs.54888) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்
**075 745 1188**

தோற்றம் 23.02.1957 மறைவு 30.04.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.